

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

மானியக் கோரிக்கை எண் - 15

## சுற்றுச்சூழல்

## அறிவிப்புகள்
2014 - 2015

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

மானியக் கோரிக்கை எண்–15

சுற்றுச்சூழல்

# அறிவிப்புகள்
# 2014–2015

தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

# 2014–2015 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

## சுற்றுச்சூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு

### 1. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு 7 மாவட்ட அலுவலக கட்டிடங்கள் கட்டுதல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஈரோடு, கோயம்புத்தூர் (தெற்கு), வாணியம்பாடி, நாகப்பட்டினம், ஒரகடம், திருவள்ளூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இயங்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகம் மற்றும் ஆய்வகங்களுக்கு 2014–15 ஆம் ஆண்டில், ரூ.14 கோடி செலவில் புதிதாக கட்டிடங்கள் கட்டப்படும்.

## 2. ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் புதியதாக மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலகம், மாவட்ட ஆய்வகம் மற்றும் தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையம் ஏற்படுத்துதல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் புதிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகக் கட்டிடம், புதிய மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் மற்றும் ஒரு தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம் ஆகியவை 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.6.15 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.



## 3. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வேலூர் மண்டல அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** வேலூர் மாவட்ட அலுவலக கட்டிடத்தில், வேலூர் மண்டல அலுவலகம் செயல்பட இரண்டாவது தளம் ரூ.75 இலட்சம் செலவில் கட்டப்படும்.

## 4. மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் நீர் பகுப்பாய்வு திறனை மேம்படுத்துதல்

தற்போது செயல்பாட்டிலுள்ள 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களைப் போல் 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் மேம்படுத்தப்பட்ட நீர் பகுப்பாய்வு முறைகளை கையாளும் வகையில் மேம்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூ. 5 கோடி செலவிடப்படும்.



## 5. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஆய்வகங்களில் காற்று மாசு கண்காணிப்பு திறனை மேம்படுத்துதல்

வாரிய ஆய்வகங்களில் காற்று பகுப்பாய்வு செய்யும் வசதியினை மேம்படுத்தும் பொருட்டு நவீன உபகரணங்களான ஒலி அளவு மானிகள் (Noise Level Meter), 2.5 மைக்ரான் அளவிற்குட்பட்ட மிதக்கும் நுண்துகள் அளவிடும் கருவிகள் (P.M 2.5), வாயு நிறமியல் கருவி (Gas Chromatograph), மின்னணுத் தராசுகள் (Electronic Balance), வாயு பகுப்பாய்வு கருவிகள் (Flue Gas analyser) ஆகியவை **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** ரூ.3.70 கோடி செலவில் வாங்கப்படும்.

## 6. காவிரி ஆற்றில் நீரின் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு 3 நீர் மாசு கண்காணிப்பு நிலையங்கள் அமைத்தல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பவானி முதல் கரூர் வரையிலான காவிரி ஆற்றுப் பகுதியில் நீர் மாசினை தொடர்ந்து கண்காணிக்க, காவிரி ஆற்றில் மூன்று இடங்களில் நீர் மாசு கண்காணிப்பு நிலையங்கள் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.



## 7. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நூலகத்தை டிஜிடைசேஷன் செய்தல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஆராய்ச்சி மாணவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் நூலகத்தை எளிதில் பயன்படுத்தும் வகையில் நூலகமானது ரூ.20 இலட்சம் செலவில் டிஜிடைசேஷன் செய்யப்படும்.

## 8. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இசைவாணை விண்ணப்பம் பெறும் முறையை எளிமைப்படுத்த 29 மாவட்ட அலுவலகங்களில் உதவி மையங்கள் அமைத்து விரிவுபடுத்துதல்

தற்போது 5 மாவட்ட அலுவலகங்களுக்கு உட்பட்ட தொழில் முனைவோருக்கு உதவிகரமாக செயல்பாட்டிலுள்ள உதவி மையத்தினை போல, தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழில் முனைவோர்கள் பயன்படுத்தும் வகையிலும் மற்றும் விண்ணப்ப படிவங்களின் நிலையினை அறியும் வகையிலும் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அனைத்து 34 மாவட்ட அலுவலகங்களுக்கும் **ரூ.32** இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும்.



## 9. சுற்றுச்சூழல் மன்றங்களுக்கான நிதியுதவியினை அதிகரித்தல் மற்றும் 3200 புதிய சுற்றுச்சூழல் மன்றங்கள் உருவாக்குதல்

சுற்றுச்சூழல் பிரச்சனைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்காக தற்போது உள்ள **8269** சுற்றுச்சூழல் மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.2500/– உதவித்தொகை **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ரூ.5000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும் உயர்த்திவழங்கப்பட்ட நிதி உதவியுடன் புதியதாக 3200 சுற்றுச்சூழல் மன்றங்கள் அமைக்கப்படும். இந்த மன்றங்களுக்கான மொத்த செலவு **ரூ.5.73** கோடி ஆகும்.

## 10. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் நிலைப்புத் தன்மையை வலியுறுத்தும் குறும்படம் தயாரித்தல்

**மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் மற்றும் நீடித்து நிலைப்பதற்குரிய வழிகளைப் பொது மக்களிடையே எடுத்துச் செல்வதற்கு, ஒரு விளம்பர குறும்படம் தயாரித்து, தேவையான விளம்பரம் செய்வதற்கு ரூ.1 கோடி வழங்கப்படும்.



## 11. திருப்பூர் மாவட்டத்திலுள்ள சர்க்கார் பெரியபாளையம் ஏரியினைப் புனரமைத்தல்

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டத்திலுள்ள சர்க்கார் பெரியபாளையம் ஏரி நீரின் தரத்தினை பராமரிப்பதற்காக ஏரிக்குள் செல்லும் கழிவு நீரினைத் தடுத்து, சுத்திகரிப்பு செய்து, சுத்திகரிக்கப்பட்ட நீரை ஏரிக்குள் செல்ல வழிவகை செய்தல், ஏரியினைத் தூர்வாருதல் போன்ற பணிகள் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** முதல் கட்டமாக ரூ.4 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## 12. பிளாஸ்டிக் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள **20** முக்கிய இடங்களில் "Message on Wheels" என்ற திட்டம் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ரூ.**64** இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகச்சிறப்பாகச் செயல்படும் சுற்றுச்சூழல் மன்றம்/ தேசிய பசுமைப் படைகளைக் கொண்ட **10** பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றிற்கு ரூ.**10,000/–** வீதம் வழங்கப்படும். இந்த திட்டங்களுக்கு ரூ.**96** இலட்சம் செலவிடப்படும்.



## 13. பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து பதனீடு செய்யும் மையம் அமைத்தல்

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதாரம் அளித்தல் போன்ற நோக்கங்களுடன், மாநிலத்தில் **16** பிளாஸ்டிக் கழிவுகள் சேகரித்து பதனிடும் மையங்கள் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ரூ. 2.40 கோடி செலவில் அமைக்கப்படும்.

**தோப்பு என்.டி. வெங்கடாச்சலம்**
சுற்றுச்சூழல் துறை அமைச்சர்